செ.வ.எண். 323.

23.6.2009

# செய்தி வெளியீடு

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (23.6.2009) தலைமைச் செயலகத்தில், மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறைச் செயலாளர் டாக்டர் எம். ராமச்சந்திரன் அவர்கள் ஜவகர்லால் நேரு தேசிய நகர புனரமைப்பு திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும், புதிய திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி ஆதாரம் பற்றியும், பொது போக்குவரத்து வசதிகளை மேம்படுத்திட புதிய பேருந்துகள் இத்திட்ட நிதியில் வாங்குவதை துரிதப்படுத்துவது பற்றியும், மேலும், சென்னை மெட்ரோ ரயில் திட்ட அமலாக்க நிலை குறித்தும் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், முதலமைச்சர் அலுவலக கண்காணிப்புப் பிரிவு செயலாளர் திரு.டி.வி. சோமநாதன், துணை முதலமைச்சரின் செயலாளர் திரு. தீனபந்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு. நிரஞ்சன் மார்டி, போக்குவரத்துத்துறை செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, நகராட்சி நிர்வாக இயக்குநர் டாக்டர் பி. செந்தில் குமார், சென்னை மாநகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) திரு. ஆஷீஷ் சாட்டர்ஜி, பேரூராட்சிகள் துறை இயக்குநர் திரு. ராஜேந்திரன், துணை முதலமைச்சரின் துணைச் செயலாளர் திரு. ரகுபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

* * * * *